*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 1157/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-1)***

*Name / Father's Name:* ***திரு.புகழேந்திரன் த/பெ. ராமசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03.03.2026.**

துவக்க நேரம் 03.16 A.N

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது செந்தாரப்பட்டியில் குடியிருந்து, விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த 7 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தென்னங்குடிபாளையத்தில் உறவினர் ஒருவரின் இறப்பிற்காக நானும், எனது உறவினர்கள் சுமார் 20 ற்கும் மேற்பட்ட நபர்களுடன் செந்தாரப்பட்டியிலிருந்து நான்குசக்கர ஆட்டோவில் காலை 09.00 மணிக்கு கிளம்பி தென்னங்குடிபாளையம் சென்று, இறுதிசடங்கு முடிந்தவுடன் அதே நான்கு சக்கர ஆட்டோவில் அனைவரும் செந்தாரப்பட்டிக்கு திரும்ப வந்துகொண்டிருந்தோம்.

2) எங்களை ஆட்டோ மூலம் அழைத்து சென்று வந்த நபரை தெரியாது. அவர் ஓட்டிவந்த ஆட்டோவின் பதிவு எண்ணும் தெரியாது. நாங்கள் பின்னால் நின்றுகொண்டு வந்தோம், அதனால் அந்த ஆட்டோவின் ஓட்டுனர் யார் என்று தெரியாது. மதியம் சுமார் 02.30 மணியளவில் ஆத்தூரிலிருந்து தம்மம்பட்டி நோக்கி சென்றுகொண்டிருந்தபொழுது மேல்கணவாய் தாண்டி சென்றுகொண்டிருந்தோம்.

3) அப்பொழுது ஆட்டோவிற்கு எதிரே இரண்டு இருசக்கர வாகனங்கள் வந்ததால், அந்த வாகனத்தின் மீது மோதாமல் இருக்க வாகனத்தை நகர்த்தியபொழுது ஆட்டோ கவிழ்ந்துவிட்டது. அதில் இருந்த எங்கள் அனைவருக்கும் காயம் ஏற்பட்டது. எனக்கு லேசான காயம் ஏற்பட்டது. காயம்பட்ட எங்கள் அனைவரையும் 108 ஆம்புலன்சு மூலம் அருகில் இருந்தவர்கள் வந்து ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்தார்கள். காயம்பட்ட ஒருசிலர் ஆத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக தெரிந்துகொண்டேன். மேலும் காயம்பட்ட இரண்டு நபர்கள் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்கள். இந்த விபத்து இருசக்கர வாகனத்தின் மீது மோதாமல் இருக்க நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுனர் ஒதுங்கி நிறுத்தியதால் ஏற்பட்டது. நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுனரின் பெயரையோ, விவரத்தையோ தெரிந்துகொள்ளவில்லை.

4) நடந்த சம்பவத்தை குறித்து ஆத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து, தம்மம்பட்டி காவல் நிலைய போலிசார், என்னிடம் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் சென்ற வாகனத்தை, யார் ஓட்டிச்சென்றார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் கொடுத்த புகாரை போலிசாரே எழுதி, என்னிடம் கையெழுத்து பெற்றார்கள் என்று சொன்னால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் தற்பொழுது சொன்ன விவரத்தைத்தான் எனது போலிசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம்.

2) நாங்கள் சென்ற திசைக்கு எதிர்திசையில் இரண்டு இருசக்கர வாகனங்களில் ஒன்று சேர்ந்தார்போல் வந்தார்களா என்றால் ஆமாம். அந்த இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள், நாங்கள் சென்ற ஆட்டோவின் மீது மோதுவது போல் வந்ததால் விபத்தை தவிர்ப்பதற்காக நாங்கள் சென்ற ஆட்டோ ஓட்டுனர் இடதுபுறமாக திருப்பும்பொழுது ஆட்டோ கவிழ்ந்துவிட்டதா என்றால் ஆமாம்.

முடிவு நேரம் 03.29 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.03 18:11:32 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 1157/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-2)***

*Name / Father's Name:* ***திருமதி.பூங்கொடி க/பெ. மாணிக்கம்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03.03.2026.**

துவக்க நேரம் 03.30 A.N

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது செந்தாரப்பட்டியில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி புகழேந்திரனை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். எனது ஊர்க்காரர்கள் ஆவார்கள். விபத்தில் இறந்த ராமராஜன் எனது உடன்பிறந்த அண்ணன் ஆவார். விபத்தில் இறந்த மருதமுத்து, எனக்கு மாமா முறை ஆவார். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த 7 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தென்னங்குடிபாளையத்தில் உறவினர் ஒருவரின் இறப்பிற்காக நானும், எனது உறவினர்கள் சுமார் 25 ற்கும் மேற்பட்ட நபர்களுடன் செந்தாரப்பட்டியிலிருந்து நான்குசக்கர ஆட்டோவில் காலை 09.00 மணிக்கு கிளம்பி தென்னங்குடிபாளையம் சென்று, இறுதிசடங்கு முடிந்தவுடன் அதே நான்கு சக்கர ஆட்டோவில் அனைவரும் செந்தாரப்பட்டிக்கு திரும்ப வந்துகொண்டிருந்தோம்.

2) எங்களை ஆட்டோ மூலம் அழைத்து சென்று வந்த நபரை தெரியாது. அவர் ஓட்டிவந்த ஆட்டோவின் பதிவு எண்ணும் தெரியாது. நாங்கள் பின்னால் நின்றுகொண்டு வந்தோம், அதனால் அந்த ஆட்டோவின் ஓட்டுனர் யார் என்று தெரியாது. மதியம் சுமார் 02.30 மணியளவில் ஆத்தூரிலிருந்து தம்மம்பட்டி

நோக்கி சென்றுகொண்டிருந்தபொழுது மேல்கணவாய் தாண்டி சென்றுகொண்டிருந்தோம்.

3) அப்பொழுது ஆட்டோவிற்கு எதிரே இரண்டு இருசக்கர வாகனங்கள் வந்ததால், அந்த வாகனத்தின் மீது மோதாமல் இருக்க வாகனத்தை நகர்த்தியபொழுது ஆட்டோ கவிழ்ந்துவிட்டது. அதில் இருந்த எங்கள் அனைவருக்கும் காயம் ஏற்பட்டது. எனக்கு இரண்டு கை மணிக்கட்டுகளிலும், இரண்டு கால்களிலும் இரத்தக்காயம் ஏற்பட்டது, முகத்தில் லேசான சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. என்னுடன் வந்த நபர்களுக்கும், கை, கால், உடம்பு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. எனக்கு காயம் ஏற்பட்டதும் வலி அதிகமானதால் நான் மயங்கிவிட்டேன். நான் கண்விழித்து பார்த்தபொழுது நான், ஆத்துார அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். காயம்பட்டவர்களில் ஒருசிலர் ஆத்துார் அரசு மருத்துவமனையிலிருந்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக தெரிந்துகொண்டேன். மேலும் காயம்பட்ட ராமராஜ் மற்றும் மருதமுத்து ஆகியோர்கள் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்கள். இந்த விபத்து இருசக்கர வாகனத்தின் மீது மோதாமல் இருக்க நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுனர் ஒதுங்கி நிறுத்தியதால் ஏற்பட்டது. நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுனரின் பெயரையோ, விவரத்தையோ தெரிந்துகொள்ளவில்லை. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எதிரிதான், நாங்கள் சென்ற ஆட்டோவை ஓட்டிச்சென்றாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆட்டோவின் ஓட்டுனரை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் தற்பொழுது சொன்ன விவரத்தைத்தான் எனது போலிசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம்.

2) நாங்கள் சென்ற திசைக்கு எதிர்திசையில் இரண்டு இருசக்கர வாகனங்களில் ஒன்று சேர்ந்தார்போல் வந்தார்களா என்றால் வந்ததாக

கேள்விபட்டேன். அந்த இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள், நாங்கள் சென்ற ஆட்டோவின் மீது மோதுவது போல் வந்ததால் விபத்தை தவிர்ப்பதற்காக நாங்கள் சென்ற ஆட்டோ ஓட்டுனர் இடதுபுறமாக திருப்பும்பொழுது ஆட்டோ கவிழ்ந்துவிட்டதா என்றால் ஆமாம்.

முடிவு நேரம் 03.47 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.03 18:11:41 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 1157/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-4)***

*Name / Father's Name:* ***திருமதி.செல்லம்மாள் க/பெ. மணி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03.03.2026.**

துவக்க நேரம் 03.48 A.N

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது செந்தாரப்பட்டியில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி புகழேந்திரன், பூங்கொடியை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். எனது ஊர்க்காரர்கள் ஆவார்கள். விபத்தில் இறந்த ராமராஜன் மற்றும் மருதமுத்து ஆகியோர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த 2019ம் வருடம் ஒருநாள் தென்னங்குடிபாளையத்தில் உறவினர் ஒருவரின் இறப்பிற்காக நானும், எனது உறவினர்கள் சுமார் 27ற்கும் மேற்பட்ட நபர்களுடன் செந்தாரப்பட்டியிலிருந்து நான்கு சக்கர ஆட்டோவில் காலை 09.30 மணிக்கு கிளம்பி தென்னங்குடிபாளையம் சென்று, இறுதிசடங்கு முடிந்தவுடன் அதே நான்கு சக்கர ஆட்டோவில் அனைவரும் செந்தாரப்பட்டிக்கு திரும்ப வந்துகொண்டிருந்தோம்.

2) நாங்கள் வந்த ஆட்டோவின் பதிவு எண் தெரியாது. நாங்கள் பின்னால் நின்றுகொண்டு வந்தோம், அதனால் அந்த ஆட்டோவின் ஓட்டுனர் யார் என்று தெரியாது. மதியம் சுமார் 02.30 மணியளவில் ஆத்தூரிலிருந்து தம்மம்பட்டி நோக்கி சென்றுகொண்டிருந்தபொழுது மேல்கணவாய் தாண்டி சென்றுகொண்டிருந்தோம்.

3) அப்பொழுது ஆட்டோவிற்கு எதிரே இரண்டு இருசக்கர வாகனங்கள் வந்ததால், அந்த வாகனத்தின் மீது மோதாமல் இருக்க எங்கள் வாகனத்தை ஓட்டிவந்த இந்த தம்பி வாகனத்தை நகர்த்தியபொழுது ஆட்டோ கவிழ்ந்துவிட்டது. அதில் இருந்த எங்கள் அனைவருக்கும் காயம் ஏற்பட்டது. எனக்கு இடதுபக்க தலையில் பலத்த காயம் ஏற்பட்டு, கை, கால், உடம்பு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட எங்கள் அனைவரையும் அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்சு மூலம் ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். நான், ஆத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கிருந்து சேலத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். காயம்பட்டவர்களில் ஒருசிலர் ஆத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக தெரிந்துகொண்டேன். மேலும் காயம்பட்ட ராமராஜ் மற்றும் மருதமுத்து ஆகியோர்கள் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்கள் என்று கேள்விபட்டேன்.

4) இந்த விபத்து இருசக்கர வாகனத்தின் மீது மோதாமல் இருக்க நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுனர் ஒதுங்கி நிறுத்தியதால் ஏற்பட்டது. நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுனரின் பெயரையோ, விவரத்தையோ தெரிந்துகொள்ளவில்லை. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எதிரிதான், நாங்கள் சென்ற ஆட்டோவை ஓட்டிச்சென்றாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆட்டோவின் ஓட்டுனரை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் தற்பொழுது சொன்ன விவரத்தைத்தான் எனது போலிசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம்.

2) நாங்கள் சென்ற திசைக்கு எதிர்திசையில் இரண்டு இருசக்கர வாகனங்களில் ஒன்று சேர்ந்தார்போல் வந்தார்களா என்றால் வந்ததாக

கேள்விபட்டேன். அந்த இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள், நாங்கள் சென்ற ஆட்டோவின் மீது மோதுவது போல் வந்ததால் விபத்தை தவிர்ப்பதற்காக நாங்கள் சென்ற ஆட்டோ ஓட்டுனர் இடதுபுறமாக திருப்பும்பொழுது ஆட்டோ கவிழ்ந்துவிட்டதா என்றால் ஆமாம்.

முடிவு நேரம் 04.03 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.03 18:11:49 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 1157/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-4 (LW-5)***

*Name / Father's Name:* ***திருமதி.அஞ்சாமணி க/பெ. விஜயகுமார்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03.03.2026.**

துவக்க நேரம் 04.04 A.N

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது செந்தாரப்பட்டியில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி புகழேந்திரன், பூங்கொடி, செல்லம்மாள் ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். எனது ஊர்க்காரர்கள் ஆவார்கள். விபத்தில் இறந்த ராமராஜன் மற்றும் மருதமுத்து ஆகியோர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த 2019ம் வருடம் ஒரு நாள் தென்னங்குடிபாளையத்தில் உறவினர் ஒருவரின் இறப்பிற்காக நானும், எனது உறவினர்கள் சுமார் 32 நபர்களுடன் செந்தாரப்பட்டியிலிருந்து நான்கு சக்கர ஆட்டோவில் காலை 09.00 மணிக்கு கிளம்பி தென்னங்குடிபாளையம் சென்று, இறுதிசடங்கு முடிந்தவுடன் அதே நான்கு சக்கர ஆட்டோவில் அனைவரும் செந்தாரப்பட்டிக்கு திரும்ப வந்துகொண்டிருந்தோம்.

2) எங்களை ஆட்டோ மூலம் அழைத்து சென்று வந்த நபரை தெரியாது. அவர் ஓட்டிவந்த ஆட்டோவின் பதிவு எண்ணும் தெரியாது. நாங்கள் பின்னால் நின்றுகொண்டு வந்தோம், அதனால் அந்த ஆட்டோவின் ஓட்டுனர் யார் என்று

தெரியாது. மதியம் சுமார் 02.30 மணியளவில் ஆத்தூரிலிருந்து தம்மம்பட்டி நோக்கி சென்றுகொண்டிருந்தபொழுது மேல்கணவாய் தாண்டி சென்றுகொண்டிருந்தோம்.

3) அப்பொழுது ஆட்டோவிற்கு எதிரே இரண்டு இருசக்கர வாகனங்கள் வந்ததால், அந்த வாகனத்தின் மீது மோதாமல் இருக்க எங்கள் வாகனத்தை ஓட்டிவந்த இந்த தம்பி வாகனத்தை நகர்த்தியபொழுது ஆட்டோ கவிழ்ந்து, இழுத்துக்கொண்டு சென்றது. அதில் இருந்த எங்கள் அனைவருக்கும் காயம் ஏற்பட்டது. எனக்கு இடதுபக்க கண், எனது பல், முகம், கை, தொடை ஆகிய இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டது. காயம்பட்ட எங்கள் அனைவரையும் அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்சு மூலம் ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். ஆத்தூர் அரசு மருத்துவமனையில் எனக்கு முடியாது என்ற சொன்னால், மேல் சிகிச்சைக்காக சேலத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். சேலம் தனியார் மருத்துவமனையில் எனது முகத்தில் பிளாஸ்டிக் சர்ஜரி செய்துள்ளார்கள். காயம்பட்டவர்களில் ஒருசிலர் ஆத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக தெரிந்துகொண்டேன். அதன் பின்னிட்டு காயம்பட்ட ராமராஜ் மற்றும் மருதமுத்து ஆகியோர்கள் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்கள் என்று கேள்விபட்டேன்.

4) இந்த விபத்து இருசக்கர வாகனத்தின் மீது மோதாமல் இருக்க நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுனர் ஒதுங்கி நிறுத்தியதால் ஏற்பட்டது. நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுனரின் பெயரையோ, விவரத்தையோ தெரிந்துகொள்ளவில்லை. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எதிரிதான், நாங்கள் சென்ற ஆட்டோவை ஓட்டிச்சென்றாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், எனக்கு மயக்கம் வந்துவிட்டதால் நான்

ஆட்டோ ஓட்டுனரை பார்க்கவில்லை. எனக்கு மயக்கம் வருவதற்கு முன்பு எங்கள் ஆட்டோவை ஓட்டிவந்த ஆட்டோவின் ஓட்டுனரை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான், நாங்கள் அவசரத்தில் கூட்டமாக ஏறியதால் ஆட்டோவை ஓட்டியவரை நான் பார்க்கவில்லை. நான் தற்பொழுது முதல் விசாரணையில் சொன்ன விவரத்தைத்தான் எனது போலிசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம்.

2) நாங்கள் சென்ற திசைக்கு எதிர்திசையில் இரண்டு இருசக்கர வாகனங்களில் ஒன்று சேர்ந்தார்போல் வந்தார்களா என்றால் வந்ததாக கேள்விபட்டேன். அந்த இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள், நாங்கள் சென்ற ஆட்டோவின் மீது மோதுவது போல் வந்ததால் விபத்தை தவிர்ப்பதற்காக நாங்கள் சென்ற ஆட்டோ ஓட்டுனர் இடதுபுறமாக திருப்பும்பொழுது ஆட்டோ கவிழ்ந்துவிட்டதா என்றால் ஆமாம்.

முடிவு நேரம் 04.26 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.03 18:11:59 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 1157/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-5 (LW-6)***

*Name / Father's Name:* ***திருமதி.கஸ்தூரி க/பெ. நல்லதம்பி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03.03.2026.**

துவக்க நேரம் 04.27 A.N

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது செந்தாரப்பட்டியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி புகழேந்திரன், பூங்கொடி, செல்லம்மாள், அஞ்சாமணி ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். எனது ஊர்க்காரர்கள் ஆவார்கள். விபத்தில் இறந்த ராமராஜன் மற்றும் மருதமுத்து ஆகியோர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தென்னங்குடிபாளையத்தில் உறவினர் ஒருவரின் இறப்பிற்காக நானும், எனது உறவினர்கள் சுமார் 32 நபர்களுடன் செந்தாரப்பட்டியிலிருந்து நான்கு சக்கர ஆட்டோவில் காலை 09.00 மணிக்கு கிளம்பி தென்னங்குடிபாளையம் சென்று, இறுதிசடங்கு முடிந்தவுடன் அதே நான்கு சக்கர ஆட்டோவில் அனைவரும் செந்தாரப்பட்டிக்கு திரும்ப வந்துகொண்டிருந்தோம்.

2) எங்களை ஆட்டோ மூலம் அழைத்து சென்று வந்த நபரை தெரியாது. அவர் ஓட்டிவந்த ஆட்டோவின் பதிவு எண்ணும் தெரியாது. நாங்கள் பின்னால் நின்றுகொண்டு வந்தோம், அதனால் அந்த ஆட்டோவின் ஓட்டுனர் யார் என்று தெரியாது. மதியம் சுமார் 02.30 மணியளவில் ஆத்தூரிலிருந்து தம்மம்பட்டி

நோக்கி சென்றுகொண்டிருந்தபொழுது மேல்கணவாய் தாண்டி சென்றுகொண்டிருந்தோம்.

3) அப்பொழுது ஆட்டோவிற்கு எதிரே இரண்டு இருசக்கர வாகனங்கள் வந்ததால், அந்த வாகனத்தின் மீது மோதாமல் இருக்க எங்கள் வாகனத்தை ஓட்டிவந்த இந்த தம்பி வாகனத்தை நகர்த்தியபொழுது ஆட்டோ கவிழ்ந்து இழுத்துக்கொண்டு சென்றது. அதில் இருந்த எங்கள் அனைவருக்கும் காயம் ஏற்பட்டது. எனக்கு, ஆட்டோ இழுத்துச்சென்றதில் இடதுபக்க கை, நெஞ்சு, மார்பு பகுதி, கண், நெற்றி ஆகிய இடங்களில் பலத்த சிராய்ப்பு காயம் ஏற்பட்டு, சதைகள் சேதமாகிவிட்டது.

4) விபத்து ஏற்பட்டவுடன் அருகில் இருந்தவர்கள் ஓடிவந்து 108 ஆம்புலன்சு–க்கு போன் செய்து எங்களை ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். ஆத்தூர் அரசு மருத்துவமனையில் எனக்கு முடியாது என்ற சொன்னால், மேல் சிகிச்சைக்காக சேலத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். சேலம் தனியார் மருத்துவமனையில் எனது கையில் பிளாஸ்டிக் சர்ஜரி செய்துள்ளார்கள். **(சாட்சி அவரது இடது பக்க நெஞ்சுப்பகுதி மற்றும் இடதுகை முழுவதும் விபத்தில் உருக்குலைந்து, பிளாஸ்டிக் சர்ஜரி செய்யப்பட்டதற்கான அடையாளத்தை காட்டி சாட்சியம் அளிக்கிறார்).** காயம்பட்டவர்களில் ஒருசிலர் ஆத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக தெரிந்துகொண்டேன். அதன் பின்னிட்டு காயம்பட்ட ராமராஜ் மற்றும் மருதமுத்து ஆகியோர்கள் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்கள் என்று கேள்விபட்டேன்.

5) இந்த விபத்து இருசக்கர வாகனத்தின் மீது மோதாமல் இருக்க நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுனர் ஒதுங்கி நிறுத்தியதால் ஏற்பட்டது. நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுனரின் பெயரையோ, விவரத்தையோ தெரிந்துகொள்ளவில்லை. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எதிரிதான், நாங்கள் சென்ற ஆட்டோவை ஓட்டிச்சென்றாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எங்கள் ஆட்டோவை ஓட்டிவந்த ஆட்டோவின் ஓட்டுனரை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் தற்பொழுது முதல் விசாரணையில் சொன்ன விவரத்தைத்தான் எனது போலிசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம்.

2) நாங்கள் சென்ற திசைக்கு எதிர்திசையில் இரண்டு இருசக்கர வாகனங்களில் ஒன்று சேர்ந்தார்போல் வந்தார்களா என்றால் வந்ததாக கேள்விபட்டேன். அந்த இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள், நாங்கள் சென்ற ஆட்டோவின் மீது மோதுவது போல் வந்ததால் விபத்தை தவிர்ப்பதற்காக நாங்கள் சென்ற ஆட்டோ ஓட்டுனர் இடதுபுறமாக திருப்பும்பொழுது ஆட்டோ கவிழ்ந்துவிட்டதா என்றால் ஆமாம்.

**நீதிமன்ற கேள்வி :**

நாங்கள் சென்ற ஆட்டோவில் எத்தனை நபர்கள் சென்றோம் என்றால் 30 நபர்கள் ஒன்றாக சென்றோம். நாங்கள் சென்ற வண்டி மெதுவாக சென்றிருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான், நாங்கள் சென்ற வண்டி மெதுவாகத்தான் சென்றது, எதிர்திசையில் வந்த இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர்கள் நாங்கள் சென்ற வண்டியின் மீது மோதுவது போல் வந்ததால் அந்த விபத்தை தவிர்ப்பதற்காக திருப்பும்பொழுது எங்கள் வண்டி கவிழ்ந்துவிட்டது. எனது அடிபட்ட இடத்தில் சர்ஜரி செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம்.

முடிவு நேரம் 04.45 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.03 18:12:08 +0530

Judicial Magistrate No.2, Attur.